# மார்ச் – 25 – திங்கள்

## அன்னை மரியாவின் மங்கள வார்த்தை திருவிழா

## “அக்குழந்தை இறைமகன் எனப்படும்.” லூக் 136

### முதல் வாசகம் : ஏசாயா 7 : 10 – 14, 8 : 10

ஆண்டவர் ஆகாசுக்கு மீண்டும் தம் திருவாக்கை அருளிச் சொல்லியது ”உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும் அது கீழே பாதாளத்திலோ, மேலே வானத்திலோ தோன்றுமாறு கேட்டுக் கொள்ளும்” என்றார். அதற்கு ஆகாசு, ”நான் கேட்கமாட்.டேன். ஆண்டவரைச் சோதிக்க மாட்டேன்” என்றார். அதற்கு எசாயா் ”தாவீதின் குடும்பத்தாரே! நான்சொல்வதைக் கேளுங்கள் மனிதரின் பொறுமையைச் சோதித்து மனம் சலிப்படையச் செய்தது போதாதோ? என் கடவுளின் பொறுமையைக்கூட சோதிக்கப் பார்க்கிறீர்களோ? ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் “இம்மானுவேல்“ என்று பெயரிடுவார். ஒன்று கூடிச் சதித்திட்டம் தீட்டுங்கள் அதுவும் விழலுக்கு இறைத்த நீராகும் கூடிப்பேசி முடிவெடுங்கள் அதுவும் பயனற்றுப் போகும். ஏனெனில் கடவுள் எங்களோடு இருக்கிறார்.

**பதில்பாடல் :** இறைவா இதோ உம் திருவுளம் நிறைவேற்ற நான் வருகிறேன்.

### இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 10 : 4 - 10

அன்பார்ந்தவர்களே! ஆம், காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது.அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, ”பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது” என்கிறார். திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் ”நீர் பலிகளையும் காணிக்கையையும் எரிபலிகளையும் பாவம்போக்கும் பலிகளையும் விரும்பவில்லை இவை உமக்கு உகந்தவையல்ல” என்று அவர் முதலில் கூறுகிறார். பின்னர் ”உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்” என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்.

### நற்செய்தி : லூக்கா 1 : 26 – 38

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, ”அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, ”மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், ”இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார். வானதூதர் அவரிடம், ”தூய ஆவி உம்மீதுவரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்றார். பின்னர் மரியா, ”நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** கடவுளின் கட்டளையை மீறியதால் பாவத்திற்குள் வீழ்ந்த மனித குலத்தை மீட்க மீட்பர் ஒருவர் அனுப்பப்படுவார் என்ற இறைவனின் வாக்கு இன்று முழுமை பெறுகின்றது. இறைமகன் யேசுவின் பிறப்பு அறிவிக்கப் படுவதனை இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவு படுத்துகின்றன, எதிர் பார்க்கப்பட்ட மீட்பர் பிறக்கப் போகின்றார். எத்தனையோ இளம் பெண்கள் தமது வயிற்றில் மெசியா பிறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு காத்திருந்த போது, சென்ம பாவமில்லாமல் உற்பவித்த கடவுளின் அடிமை மரியாவிற்கு அந்த பாக்கியம் கிடைக்கின்றது. அவர் கடவுளினால் தெரிவு செய்யப் பட்டவர். தமது மகனை சுமக்க தகுதியுள்ள வராக, ஆயத்தம் செய்யப்பட்டவர். மீட்பரின் பிறப்பின் அறிவிப்பு ஆரம்பத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியது. கணவனை அறியாத மரியா இது எங்கனம் ஆகும் என்று யோசிக்கின்றார். திருமணம் செய்யாத கன்னிப்பெண் எவ்வாறு கருத்தரிக்க முடியும்? இது யோசேப்புவிற்கு நெருடலை கொடுத்தது. ஆனால் அது கடவுளினால் தெளிவு படுத்தப்படுகின்றது. மாட மாளிகையில், பணக்கார இடத்தில் பிறப்பார் என்று எதிர்பார்க்கப் பட்டவர், ஏழை தச்சக் குடும்பத்தில் எவ்வாறு பிறக்கமுடியும் என்று சமுதாய தலைவர்கள் நினைத்தார்கள். இவ்வாறான எதிமறையான எதிர்பார்ப்புகளின் மத்தியில் யேசுவின் பிறப்பு அறிவிக்கப் பட்டது. தவக்காலத்தில் எம்மால் முடிந்த அளவு ஒறுத்தல் முயற்சியில் ஈடுபடுகின்ற நாம் இந்த அறிவிப்பை எவ்வாறு பார்க்கின்றோம்? இன்று எத்தனையோ குழந்தைகள் கருவிலேயே கொல்லப் படுகின்றார்கள். வேண்டாதவர்களாக குப்பை தொட்டிகளில் வீசப் படுகின்றார்கள். பாலியல் ரீதியாக துன்புறுத்தப் படுகின்றார்கள். குழந்தைத் தொழிலாளர்களாக ஓய்வின்றி உழைக்கின்றார்கள். மனிதர்களின் தவறால் அனாதைகள் ஆக்கப் படுகின்றார்கள். குழந்தைகள் மட்டில் நாம் கவனம் எடுக்கின்றோமா? அவர்களை நல்ல முறையில் வளர்க்கின்றோமா? பலவிதமான உடல் மன ரீதியாக பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்கும், படினியால் வாடும் குழந்தைகளுக்கும், அன்பிற்காக ஏங்கும் குழந்தைகளுக்கும் எம்மால் முடிந்த அளவு உதவி செய்ய இத்தவக்காலம் நமக்கு துணை புரியட்டும்.